திருவண்ணாமலை "TANFED" மில்

166—(*வினா எண் 4282) திரு. மு பாண்டுரங்கன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் உள்ள "TANFED"க்கு சொந்தமான மில்லை "TANCOF" வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், "TANCOF"-விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், எப்பொழுது ஒப்படைக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 12-9-1985 அன்று தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருவையாறு, பூதலூர், ஒரத்தநாடு பகுதிகளில் பழுதுபட்ட குழாய்கள்.

167—(*வினா எண் 9147) திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு. பூதலூர், ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் குடிநீர் தருவதற்காக போடப்பட்டுள்ள பைப்புகள், டேப்புகள் பழுதுபட்டு செயல்படாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சரிசெய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 5 இறைப்பான்களும், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும் பழுதுபட்ட நிலையில் உள்ளன. இறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஊராட்சி மன்றங்களிலே குடிநீர் வழங்குகின்ற நிலையில், பல்வேறு இடங்களில் பைப்புகள் பழுதடைந்துள்ளன. இன்றைய நிலையில்

ஊராட்சிகளிலே நல்ல நிதி நிலைமை இல்லை. தெரு விளக்குக்குக் கூட பணம் கட்டுவதற்கு சரியான நிதி நிலைமை இல்லாத சூழ்நிலையில், பைப்புகளை அவர்களால் பழுது பார்க்க முடியாத நிலையைக் கவனத்தில் கொண்டு, பொது நிதியிலிருந்து அல்லது விசேஷ நிதி மூலம் இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, இறைப்பான்கள் பழுதுபட்டால் உடனுக்குடன் சரி செய்ய தக்க நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்ட குழாய்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தால் போடப்படுகின்ற பைப்புகளும், இறைப்பான்களும் தரமானவையல்ல என்று சொல்லப்படுகிறது. எனவே தரமான பைப்புகளையும், இறைப்பான்களையும் வாங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இதுவரையிலே வைக்கப்பட்டிருக்கிற பைப்புகளும், கை இறைப்பான்களும், விசை இறைப்பான்களும் ஒழுங்காக வேலை செய்து வருகிறதென்று நான் நம்புகிறேன்.

தஞ்சை மாவட்டம், களப்பாலில் இரண்டாவது எண்ணெய் கிணறு

168—(*வினா எண் 6489) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், களப்பாலில் இரண்டாவது எண்ணெய்க் கிணறு தோண்டப்படுகிறதா?

(ஆ) வேலை எந்த அளவிற்கு நடைபெற்று வருகின்றது?

(இ) ஒரு நாளைக்கு எவ்வளவு எண்ணெய் கிடைக்கும் என்பது பற்றி அரசுக்கு ஏதும் விபரம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) எண்ணெய் எரிவாயுக் கமிஷன், கோவில்களப்பால் பகுதியில் எண்ணெய் துருவும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. கோவில் களப்பாலிலுள்ள இரண்டாவது கிணறு வறண்டு விட்டதால் மூன்றாவது கிணற்றில் எண்ணெய் எடுப்பதற்காகத் தற்போது துளையிடப்படுகிறது.